1983 ஜனவரி 31]

கொடுக்கும் என்ற அந்த முறையில் லீசுக்கு விடாமல் அதை அரசாங்கம் தானே எடுத்து, தான் வைத்திருக்கக்கூடிய கனிமப் பொருள் கார்ப்பரேஷன் மூலமாகவே இதையும் நிர்வகிக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னதைப் போல் 12 பேர்களுக்கு, 1970–லேயே லீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப் பொழுதெல்லாம் அதிகபட்சம் ஆறு ஆண்டுகளுக்கு மேலே அவர்களே வெட்டியெடுத்துத் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்தும் அந்த அமைப்பாக இருந்தால்தான் கொடுக்கிறோம். வெட்டி எடுத்து விற்பவர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்குத்தான் கொடுக் கிறோம். 1979-ஆம் ஆண்டு சமயத்தில் 20 ஆண்டுகள் என்று கொடுத்து அது 93, 92, 89, 88, 85 என்று இப்படித்தான் லீஸ் முடிகிறது. அதை நாம் இடையிலே தடுத்தால் அவர்கள் நீதிமன்றத்திற்குப் போகக்கூடிய வாய்ப்பிருக்கிறது. ஏற் கெனவே லீஸுக்குக் கொடுத்து 93 லேதான் முடிகிறது என்றால் அதை இப்பொழுது நாம் நிறுத்த முடியாது. ஆனால் புதிதாக எடுக்கின்ற அளவிற்குத் தரமாகவும் இருந்து அதிகமாகவும் இருந் தால் டாமின் நிறுவனம் அந்த முயற்சியிலே ஈடுபடும்.

தொழில் நிறுவனங்களுக்காக செய்யப்படும் நில ஆர்ஜிதம்.

*வினா எண். 79—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நிறுவப்படும் தொழில் நிறுவனங்களுக்கு அரசு அல்லது தனியார்துறை நிலம் ஆர்ஜிதம் செய்யும்போது அதனால் பாதிக்கப்படும் நில சொந்தக்காரர்களின் குடும்பத்தாருக்கு அந்த நிறுவனங்களில் வேலை வாய்ப்பு அளிக்க அரசு திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: அரசு நிறுவனங் களுக்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு நிலமிழந்த குடும்பங் களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு நபர் வீதம் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை தனது 29–6–1978 ஆம் நாளிட்ட ஆணை நிலை எண் 656–ல் அரசு அனைத்து பொதுத்துறை நிறுவனங்களும் நிலமிழந்த குடும்பங் களுக்கு, குடும்பத்திற்கு ஒருவர் வீதம் வேலை வாய்ப்புத் துறையினை அணுகாமல் நேரடியாக வேலை வாய்ப்பளிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. இந்த ஆணை தற்பொழுது அமுலில் உள்ளது.

தனியார் துறைகளுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யும்போது அதனால் பாதிக்கப்படுவோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பது சம்பந்தமாக அரசினுடைய கவனத்திலே, பரிசீலனையிலே இருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள்: பேரவைத் தலைவரவர்களே, நெய்வேலி பகுதியில் இரண்டாவது சுரங்கம் வெட்டும்பொழுது அங்குள்ள ஆதிதிராவிட மக்களுக்கும், பின்தங்கிய மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் எடுக்கப்பட்டும் இன்று வரையிலேயும் அவர்களுக்கு உத்தியோகம் கொடுக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியிருக்கும்பொழுது, தற்பொழுது உத்தரவு இருப்பதால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதற்காக ஏற்கனவே அந்தப் பகுதியிலே சில கிளர்ச்சிகள் ஏற்பட்டபொழுது மாவட்ட ஆட்சித் தலைவர் அளவிலே பேச்சு வார்த்தை நடந்தது. அதற்குப் பிறகு அரசாங்க அளவிலேயும் நானும்கூட அந்த அதிகாரிகளை யெல்லாம் வரச்சொல்லி நம்முடைய அதிகாரிகளை வைத்துக் கொண்டு பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு முடிந்த அளவிற்கு அந்தப் பகுதியில் உள்ள அனைவருக்கும் அதிலும் குறிப்பாக நிலம் கொடுத்திருக்கும் அனைவருக்கும் வேலை வாய்ப்பை நிச்சயமாகக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம்.

THIRU L. ILAYAPERUMAL: My question has not been answered properly. That is why, I want to put another question.

MR. SPEAKER: You must give notice for another question; but not now.

திரு. தி. அன்பழகன்: பேரவைத் தலைவரர்களே, புதிதாக ஒரு பகுதியிலே தொழில் துவங்கப்படும் பொழுது அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பொதுக் கேள்வி.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, தொழில் நிறுவனங்களுக்கு நிலம் ஆஜிதம் செய்யும்பொழுது, அதனால் பாதிக்கப்படும் நிலச் சொந்தக்காரர்களின் குடும்பத்தாருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதிலே, அரசு நிறுவனங்களாக இருந்தால் வாய்ப்பளிக்கப்படுவதாகவும், தனியார் துறைகளில் நிலம் ஆர்ஜிதம் செய்யும்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பது சம்பந்தமாகப் பரிசீலனையில் உள்ளது என்றும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆலங்குளம் சிமெண்ட் ஃபேக்டரிக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யும்பொழுது பாதிக்கப்

1983 ஜனவரி 31]

பட்டவர்கள் மனுச் செய்தும் இன்னும் பலருக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்படவில்லை. வெளியிலேயிருந்து அவர்கள் ஆட்களை எடுக்கிறார்கள். எனவே, தனியார் துறைகளுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யும்போதும் அதனால் பாதிக்கப்படுகின்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற கண்டிஷனைப் போட்டு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் துறைகளுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யும்பொழுது அதனால் பாதிக்கப்படுவோருக்குவேலைவாய்ப்பு அளிப்பது சம்பந்தமாக அரசு பரிசீலித்து வருகிறது. பொதுத் துறை நிறுவனங்களுக்கான தொழிற்சாலைகளுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யும்பொழுது நிலம் கொடுத்தவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆனால் அதை நடைமுறைப்படுத்துவதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. உதாரணமாக ஒரு குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு என்ற முறையில் நிலம் கொடுத்த அனைவருக்கும் கொடுப்பது என்று சொல்லும்பொழுது அந்தக் குடும்பத்தில் 45 அல்லது 50 வயதில் ஒருவர் இருக்கலாம். ஆனால் அந்தத் தொழிற்சாலைக்குத் தேவைப்படுகின்றவர்களோ 10 ஐ.டி.ஐ. படித்தவர்களாக இருக்கலாம். நிலம் கொடுத்தவரோ 5 ஆவது வரை படித்த 50 வயதானவராக இருந்தால் அவரை வேலைக்கு எடுத்துக்கொள்ள முடியாது. டெக்னோகிராட்ஸ் தேவைப்படாமல், ஐ. டி. ஐ. போன்ற படிப்பு அறிவு தேவைப்படாத, உழைப்பு மட்டுமே தேவைப்படும் வேலையாக இருந்தால் இவர்கள் தேர்வு செய்யப் படுவார்கள். டெக்னிக்கல் போஸ்டாக இருந்தால், அந்தக் குடும்பத்திலே யாராவது அந்தப் படிப்பு படித்தவராக இருந்தால் அவர் அப்சார்ப் செய்யப்படுவார். ஆகவே, தேவைக்கேற்ப, தொழிற்சாலையின் அளவிற்கேற்ப அக்காமடேட் செய்யப்படு கிறார்கள்; இடம் தரப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 80 மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக் கிணங்க ஒத்தி வைக்கப் பெறுகிறது.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

(முற்பகல் 10–20)

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அளித்தல்.

திரு. என். சங்கரய்யா: பாயிண்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, திரு. கு. ரமணி, எம்.எல்.ஏ. அவர்களுக்கு 6-1-1983 அன்று அவர் சட்டமன்ற உறுப்பினர் பணியை ஆற்றக்கூடிய காலத்தில், அவருக்குக் கொலை மிரட்டல் டெலிபோன் மூலம்